செ.வெ.எண் : 727 நாள்: 10.11.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் திட்டை அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோவிலில் குரு பெயர்ச்சி விழாவிற்கு 10 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் திருக்கோவிலுக்கு உள்ளே செல்ல அனுமதி கிடையாது என மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப அவர்கள் தகவல்**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், திட்டை அருள்மிகு வசிஷ்டேஸ்வரா் திருக்கோயில் எதிர்வரும் 15.11.2020 அன்று நடைபெறயுள்ள குருபெயர்ச்சி விழாவினை முன்னிட்டு முன்னேற்பாடு குறித்து அனைத்துத்துறை அலுவலா்களுடன் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவா்கள் தலைமையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்கள் தெரிவித்ததாவது,**

தஞ்சாவூர் மாவட்டத்தில் திட்டை கிராமத்தில் உள்ள அருள்மிகு வசிஷ்டேஸ்வரா் திருக்கோயிலில் (குரு ஸ்தலம்) குருபெயர்ச்சி விழா வருகின்ற 15.11.2020 அன்று இரவு 09.48 மணி முதல் நடைபெறவுள்ளது.

குரு பெயர்ச்சி விழாவிற்கு வருகை தரும் பக்தர்கள் அனைவரும் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள திருக்கோவிலில் தண்ணீர் குழாய்,கிருமிநாசினி தெளித்தல்,பக்தர்கள் அனைவருக்கும் வெப்பமானி கொண்டு பரிசோதனை செய்து,கை சுத்திகரிப்பான் சுத்திகரிப்பு பின்பே கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்து இருக்க வேண்டும்.

தற்காலிக மருத்துவ முகாமில் போதுமான எண்ணிக்கையில் மருத்துவ பணியாளர்கள் சுகாதார அலுவலர்கள் சுழற்சிமுறையில் பணியமர்த்தப்படவுள்ளனர் மேலும் மருத்துவர் குழுவினருடன் தயார் நிலையில் ஆம்புலன்ஸ் வசதி போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பக்தர்களுக்கு குடிநீர் வசதி ஏற்பாடு செய்தல்,திருக் கோயிலின் சுற்றுப்புறங்களில் தற்காலிய கழிவறைகள் அமைக்க ஏற்பாடு செய்தல்,குடிநீர் மருத்துவமுகாம் அவசரகால வழிகள் உள்ளிட்ட பாதைகளை ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது

பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு கோவிலுக்கு வெளிப் பகுதியில் இரு சக்கர வாகனம் நான்கு சக்கர வாகனங்கள் போக்குவரத்து இடையூறு இல்லாமல நிறுத்தும் இடம் அமைத்தல்,பாதுகாப்பு பணிக்காக கூடுதல் காவலர்களை பாதுகாப்பு பணியில் அமர்த்த அறிவுறுத்தப்பட்டு திருக்கோவில் வளாகம் மற்றும் வெளிப்புறங்களில் கண்காணிப்பு கேமராக்களை கொண்டு கண்காணிக்கப்பட உள்ளது.மேலும் பக்தர்கள் வந்து செல்ல புதிய பேருந்து நிலையத்திலிருந்து திட்டை கிராமத்திற்கு தற்காலிக நகரப்பேருந்து சிறப்பு பேருந்து ஏற்பாடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தமிழக அரசு வெளியிட்டுள்ள கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளின்படி 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களை திருக்கோயிலுக்கு உள்ளே சென்றிட அனுமதி கிடையாது விழாவில் போதுமான சமூக இடைவெளியிலும் கூட கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும் அனைத்துத் துறை அலுவலா்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணியினை திறம்பட முடித்திட வேண்டும். என மாவட்ட ஆட்சித் தலைவா் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவா்கள் தெரிவித்துள்ளளார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பெ.அரவிந்தன்,பட்டுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.பாலசந்தர்,பயிற்று ஆட்சியர் திரு.எம்.பி.அமித்,மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் திருஅ.பழனி,இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.தென்னரசு,திருக்கோயில் செயல் அலுவலா் திருமதி தனலெட்சமி மற்றும் தொடர்புடைய அரசுத்துறை அலுவலா்கள் கலந்து கொண்டனா்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.